MAS LS LEG

LIBRARY
30 MAR 1963
MADRAS LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, the 23rd March 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Labour dispute in the Vellore Electricity System

*7 *S.N.Q.*—SRI S. M. ANNAMALAI, SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வேலூர் திட்டம் மின்சார இலாகா ஊழியர்கள் இம்மாதம் 21-ம் தேதி வேலை நிறுத்தம் செய்யப் போவதாக நோட்டீஸ் கொடுத்துள்ளார்களா ?

(ஆ) அப்படியானால் அதற்கான காரணங்கள் யாவை ?

(இ) வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The strike notice has been issued in respect of nine demands.

(*c*) The Government have asked the Commissioner of Labour to instruct the Labour Officer, Vellore, to take up conciliation and endeavour to bring about a settlement of the dispute.

SRI S. M. ANNAMALAI : சார், இந்த வேலை நிறுத்த நோட்டீஸ் சர்க்காருக்கு எப்பொழுது கிடைத்தது. அரசாங்கம் இதைத் தவிர்ப்பதற்கு ஏன் தலையிடாமல் இருந்தது ? ஒரு நாள் வேலை நிறுத்தமாக இருந்தாலும் இதனால் பயிர்கள் தண்ணீர் இன்றி மிகவும் பாதிக்கப்படுகின்றது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் யார் நன்மைக்குச் சொல்லுகிறார் என்று தெரியவில்லை. இது விரோதமான வேலை நிறுத்தம்.

SRI V. K. KOTHANDARAMAN : வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்தபிறகும் மேலும் இரண்டு வாரம் தள்ளிப்போட்டுவிட்டு தீர்வு காணவேண்டுமென்று தொழிலாளர்கள் முயற்சி பண்ணிக்கொண்டிருக்கும்போது 2,000 தொழிலாளர்களுக்கு மேல் 1960-ம் வருடம் மார்ச்சு மாதம் 18-ந் தேதியிலிருந்து 1960-ம் வருடம் மார்ச்சு மாதம் 23-ம் தேதி வரையிலும் வேலையில்லை, போர்ட் உத்தரவு என்று சொல்லி. . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி போட வேண்டும். பிரசங்கம் செய்யக்கூடாது.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த உத்தரவானது தொழிலாளர்களுக்கு ஆத்திரம் ஊட்டக்கூடிய ஒரு செய்கை அல்லவா என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தொழிலாளர்கள் முதலாளிகளிடத்திலே ஆத்திரம் அடைவது தவறு, சாதாரணமாக யார் தவறு செய்தாலும் தொழிலாளர் தகராறு வேண்டுமென்றே பழி வாங்குவதற்கு

[23rd March 1960

செய்யப்படுவது என்று தோன்றினாலும், இது உண்மையா இல்லையா என்று தெரியும் முன்னால் தொழிலாளர்கள் ஆத்திரம் அடைவது சரியாகாது. ஆகவே அங்கத்தினர்கள் இதை நன்றாக தொழிலாளர்களுக்கு சொல்லவேண்டும். ஆத்திரப்பட்டு பேசுவதினால் சிரமம்தான் ஏற்படும். தொழிலாளர் தகராறுகளை தீர்ப்பதற்கு சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும். அதற்கு எல்லோரும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். முதலாளிகள் அநியாயமாக நடந்துகொண்டால் சர்க்கார் தலையிட்டு தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்க தயாராயிருக்கிறது.

MR. SPEAKER : கேள்வி நேரத்தின்போது கனம் அங்கத்தினர்கள் கேள்விதான் போடவேண்டும். பிரசங்கம் செய்யக்கூடாது, அவர்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லக்கூடாது. யாராவது ஒரு கனம் அங்கத்தினர் கேள்வி போடாமல் பிரசங்கம் செய்தால், மறுபடியும் அந்த அங்கத்தினர் கேள்வி போடுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கமாட்டேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள் ஆத்திரப்படக்கூடாது என்று சொன்னதை நான் வரவேற்கிறேன். இதுமாதிரி அவர்களுக்கு புத்திமதி கூற தயாராய் இருக்கிறோம். ஆனால் சிப் என்ஜினியர் ஆத்திரம் ஊட்டக்கூடிய காரியங்கள் செய்திருக்கிறார்கள். ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் அவருக்கும் புத்திமதி கூறுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தொழில் இலாக்கா அதிகாரிகளுக்கும் மற்ற இலாக்கா அதிகாரிகளுக்கும் இதே புத்திமதிதான் சர்க்கார் கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் உடனடியாக எது நியாயம் எது நியாயம் இல்லை என்று கண்டுபிடிக்கமுடியாது. அதனால் தான் ஆரம்பத்திலேயே நான் ஆத்திரப்படக்கூடாது என்று சொன்னேன். சம்பந்தப்பட்டவர்கள் நிராகரித்தாலும் சற்று பொறுமையோடு இருக்க வேண்டும்.

SRI S. M. ANNAMALAI : வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் மறுபடியும் வேலைக்கு வரக்கூடாதென்று சூப்ரன்டெண்டிங் என்ஜினியர் உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அந்த உத்தரவை ரத்து செய்வதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதுபற்றி எந்த விதமான தகவலும் என்னிடம் இல்லை. ஆனால் பொதுவாக வேலை நிறுத்த காலத்தில் வேலைக்கு வராமல் இருந்தவர்கள் எல்லோரையும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது சர்க்கார் கொள்கை.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் மின்சார அமைச்சரிடம் தொழிலாளர்களினுடைய கோரிக்கைகளை சமர்ப்பித்தால், கனம் தொழில் அமைச்சரிடம் கொண்டுபோங்கள் என்று சொல்லுகிறார். அதே மாதிரி தொழில் அமைச்சரிடம் சொன்னால், மின்சார போர்ட்டிற்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். போர்ட்டைக்கேட்டால் சர்க்காரைக் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழிப்பதனால் இம்மாதிரி போராட்டம் நடக்கிறது என்பது உண்மையா ?

THE HON SRI R. VENKATARAMAN : இது தனியாக அமைக்கப்பட்ட ஒரு கார்பொரேஷன் விஷயம். இதில் யாருக்கு நிர்வாகப் பொறுப்பு இருக்கிறது என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இதில் சர்க்காரை விட போர்ட்டுக்குத்தான் அதிக பொறுப்பு என்று நினைக்கிறேன். போர்ட் சர்க்காரைக் கேளுங்கள் என்று சொன்னால் அப்போது சர்க்கார் அதைப்பற்றி கவனிக்கும்.

SRI A. A. RASHEED : May I know whether the strike has spread to any other town or village?

THE HON. SRI R. VENKATARAMAN : Not that I am aware of.

SRI K. ANBAZHAGAN : நாட்டுக்கு இன்றியமையாத மின்சார உற்பத்தி எப்போதும் கெடாமல் இருப்பதற்கும் தொழிலாளர்கள் நலனைப்பாதுகாப்பதற்கும் பொறுப்புள்ள அரசாங்கம் தொழிலாளர்களின் குறைகளை தீர்ப்பதற்கும் இந்த கார்பொரேஷன் மூலம் எப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்கு தொழில் இலாகா அவ்வப்போது என்ன செய்யவேண்டுமென்று ஆலோசனை கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

Inter-State Roads

* 469 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether our Government have discussed with the Kerala Government during May 1959 regarding the inter-State Road problem for regulating Road Transport on inter-State routes; and

(*b*) if so, the result of the discussion?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The problem in regard to operation of transport services on inter-State routes between Madras and Kerala States were discussed by the representatives of the two States during May 1959 at a conference presided over by the Chairman, Inter-State Transport Commission. It was agreed that in the case of lorries the number of inter-State permits to be issued by each State should be on parity basis. As regards inter-State permits for stage carriages, no agreement has yet been reached and the matter is under correspondence with the Government of Kerala.

SRI N. K. PALANISAMI : The Hon. Minister was saying that agreement has been reached on parity basis. May I know what parity basis is and whether parity is with reference to the total tonnage of goods carried into the States or the total number of trips?

MR. SPEAKER : The hon. Member seems to know the parity basis as is evident from the latter part of his question.

THE HON. SRI V. RAMAIAH : I do not have that information here; if I remember aright it is on the basis of number of vehicles operating and the number of miles.

SRI N. K. PALANISAMI : Where was this problem discussed and the parity basis arrived at?

THE HON. SRI V. RAMAIAH : I have stated it in my original answer.

Increase of buses in the Mudukulathur area

* 480 *Q.*—SRI K. ANBAZHAGAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any demand from the public of Mudukulathur for the increase of buses plying in the Mudukulathur area and for the sanction of new routes?